**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR**

**O.S. No. 253/2017**

Deposition of **PW.1** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tr. G. Mahavishnu, Gr. III Bench Clerk of this court, on 27.10.2025 in accordance with the provision of Act 1 of 1873.

Name : செல்லக்கண்ணு Father's Name : நாராயண படையாட்சி

துவக்க நேரம்: 03.46 P.M.

சாட்சி முன்னிலையானார் உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

1. எங்கள் ஊரில் உள்ள மாரியம்மன் கோவில் சீலியம்பட்டி கிராமத்தின் மத்தியில் உள்ளது என்றால் சரிதான். பாலமுருகர் கோவில் மேற்படி மாரியம்மன் கோவிலுக்கு மேற்கு புறத்தில் உள்ளது என்றால் சரிதான், சுமார் 50 அடி தூரத்தில் மேற்கில் உள்ளது. சீலியம்பட்டி கிராமத்தின் தென்புறத்தில் சுருட்டையம்மன் கோவில் உள்ளது என்றால் சரிதான். வடகிழக்கு பகுதியில் செல்லியம்மன் கோவில் உள்ளது என்றால் சரிதான்.

2. இந்த வழக்கை செல்லியம்மன் கோவில், சுருட்டையம்மன் கோவில் சம்மந்தமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் சீலியம்பட்டி கிராமத்தில் பரம்பரை கரக்காரர் என்பதற்கான என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் கோவில் கும்பாபிஷேக வீடியோவின் CD, புகைப்படங்கள், கோவிலின் கல்வெட்டு ஆகியவைகளை தாக்கல் செய்துள்ளேன். வா.த.சா.ஆ.1-ஆன புகைப்படங்கள் எந்த தேதியில் எடுக்கப்பட்டது என்று எனது வழக்குரையில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான், ஆனால் 20.01.2001-ல் கும்பாபிஷேக செய்தபோது மேற்கண்ட புகைப்படங்கள் எடுக்கப்பட்டது. நான் சொல்வது தவறு என்றாலும் வா.த.சா.ஆ 1-ல் உள்ள

புகைப்படங்களுக்கும், மாரியம்மன் கோவில் கும்பாபிஷேகக்திற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றாலும் சரியல்ல. மேற்கண்ட புகைப்படங்கள் எடுக்கப்பட்டதற்கான ரசீதுகள் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல, தாக்கல் செய்துள்ளேன். நான் புகைப்படங்கள் எடுத்தாக கூறியுள்ள தேதியிக்கும் அதற்கான ரசீதுகளுக்கும் தொடர்பு இல்லை என்றால் சரியல்ல.

3. வா.த.சா.ஆ.6 ஆன புகைப்படம் எடுக்கப்பட்டதற்கான ரசீது கடந்த 09.08.2022 அன்று வழக்கிற்கு பின்னிட்டு பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி புகைப்படங்கள் யாரால் எடுக்கப்பட்டது என்று வழக்குரையில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.த.சா.ஆ.1-ன் அடிப்படையில் வழக்கு கோவிலின் கும்பாபிஷேகத்திற்கு எடுக்கப்பட்ட புகைப்படம் கூற இயலாது என்றால் சரியல்ல, அந்த புகைப்படங்கள் மாரியம்மன்கோவில் கும்பாபிஷேகத்தின்போது எடுக்கப்பட்டதுதான். நான் தாக்கல் செய்துள்ள புகைப்படங்களுக்கும், தாவா கோவில் கும்பாபிஷேகத்திற்கும் தொடர்பு இல்லை என்றாலும் வழக்கிற்காக அவைகள் தயாரிக்கப்பட்டவை என்றாலும் சரியல்ல. நானும் மற்ற கரக்காரர்களும் சேர்ந்துதான் அந்த புகைப்படங்களை எடுத்தோம்.

4. எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள CD, ரசீது ஆகியவைகள் வழக்கிற்காக பின்னிட்டு தயாரிக்கப்பட்டவைகள் என்றால் சரியல்ல. நான் எந்த தேதியிலிருந்து, சீலியம்பட்டி கிராம கரைக்காரராக இருந்து வந்தேன் என்று தாவாவில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அழகப்படையாட்சி என்பவர் எனது தந்தை வழி தாத்தா என்றால் சரிதான். அழகப்படையாட்சி என்பவருக்கு எத்தனை வாரிசுகள் என்றால் செல்லமுத்து, ஆனைமுத்து படையாட்சி, நாராயணபடையாட்சி, அப்பு படையாட்சி ஆகிய நான்கு வாரிசுகள். அழகப்படையாட்சியின் 3-வது மகன் நாராயணபடையாட்சியின் மகன் நான் என்றால் சரிதான். அழகப்படையாட்சியின் முதல்

மகனான செல்லமுத்துவின் மகன் பெயரும் செல்லமுத்து என்றால் சரிதான். மேற்படி அழகப்படையாட்சியின் பேரன் செல்லமுத்துவிற்கு நான்கு வாரிசுகள் என்றாலும் அதில் மூத்த மகன் பெயர் செல்லமுத்து என்றாலும் சரிதான். மேற்படி செல்லமுத்துவின் உடன்பிறந்த சகோதரர் செம்மலை என்றால் சரிதான்.

5. பிரதிவாதியின் சகோதரர் தற்பொழுது கூடமலையில் வசித்து வருகிறார் என்றால் கடந்த 20 வருடங்களுக்கு முன்பு சீலியம்பட்டியில் வசித்து வந்தார். அதன் பின்னிட்டு கூடமலைக்கு சென்றுவிட்டார். பிரதிவாதியின் மற்றொரு சகோதரர் பழனிமுத்து கேரளாவில் வசித்து வருகிறார் என்றால் சரிதான், அவரும் கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்பு இரண்டாவது திருமணம் செய்து கொண்டு கேரளா சென்றுவிட்டார். பிரதிவாதி நிரந்தரமாக சீலியம்பட்டியில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். பிரதிவாதியின் தகப்பனார் கடந்த 1993-ம் இறந்துவிட்டார் என்றால் எனக்கு தெரியாது.

6. பிரதிவாதியின் தந்தை இறக்கும்வரை அவர்தான் சீலியம்பட்டி கிராமத்தில் கரைக்காரராக இருந்து வந்தார் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் தந்தை கரைக்காராராக இருந்து வந்து அவர் இறந்தபிறகு பிரதிவாதி தொடர்ந்து சீலியம்பட்டியின் கரைக்காரர்ராக தற்பொழுதுவரை இருந்து வருகிறார் என்றால் சரியல்ல. எனது தந்தை நாராயணபடையாட்சி எப்போதும் கரைக்காரர்ராக இருந்ததில்லை என்றால் சரியல்ல. எனது தந்தைதான் கரைக்காரார்ராக இருந்து வந்தார் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆவணம் இல்லை ஆனால் சாட்சிகள் உள்ளன.

7. சீலியம்பட்டிக்கும், சீலியம்பட்டி புதூர் கிராமத்திற்கும் இடையே தாவா கோவில் உட்பட மற்ற கோவில்கள் தொடர்பாக எந்த ஆண்டிலிருந்து வழக்கு நடைபெற்று வருகிறது என்றால் கடந்த 2002-ம் ஆண்டிலிருந்து நடைபெற்று வருகிறது. நான் கரைக்காரர்ராக

இருந்து வந்து கடந்த 2002-ம் ஆண்டு அந்த பொறுப்புகளை பிரதிவாதியிடம் ஒப்படைப்பதாக கூறியுள்ள நிலையில் அதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆனால், வாய்மொழியாகதான் பொறுப்புகளை ஒப்படைத்தேன்.

8. எங்கள் கிராமத்தில் தர்மகர்த்தாவை எத்தனை கரைக்காரர்கள் உள்ளனர் என்றால் எட்டு கரைக்காரர்கள். சீலியம்பட்டி புதூர் கிராமத்தின்மீது சீலியம்பட்டி கிராமத்தின் சார்பாக தாக்கல் செய்த வழக்கில் பிரதிவாதிதான் கரைக்காரர் என்ற முறையில் கையொப்பம் செய்தார் என்றால் நான் கடந்த 2002-ம் ஆண்டு வேறு ஒரு வழக்கில் கைது செய்யப்பட்டதால், அந்த பொறுப்புகளை பிரதிவாதியிடம் ஒப்படைத்தேன். அவர் எப்படி கையொப்பமிட்டார் என்று எனக்கு தெரியாது.

9. எவ்வளவு தொகை கையாடல் செய்யப்பட்டதற்காக என்மீது குற்ற வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் பணியாளர்களுடன் சேர்ந்து ரூ.28 லட்சம் கையாடல் செய்யப்பட்டதாக தாக்கல் செய்யப்பட்டது. சீலியம்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தின் பணியாளர்கள் அனைவரும் சேர்ந்து கூட்டாக கையாடல் செய்ததாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான், அந்த வழக்கிலிருந்த நான் விடுதலை செய்யப்பட்டேன். அதற்கான தீர்ப்பு நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். மேற்கண்ட குற்ற வழக்கிலிருந்து விடுதலையாகவில்லை என்றால் சரிதான். தண்ட கட்டணம் செலுத்துவதிலிருந்துதான் விடுவிக்கப்பட்டேன் என்றால் சரிதான். மேற்கண்ட கையாடல் தொடர்பான குற்ற வழக்கிலிருந்து விடுதலை செய்யப்படவில்லை என்றால் அந்த வழக்கு இன்னும் நிலுவையில் உள்ளது.

10. பிரதிவாதியின் தந்தை செல்லமுத்து இறந்தபின்னிட்டு பிரதிவாதிதான் சீலியம்பட்டி கிராமத்தில் கரைக்காரர்ராக இருந்து செயல்பட்டு வருகிறார் என்றால்

சரியல்ல. கடந்த 2002-ம் ஆண்டு பிரதிவாதியிடம் கரைக்காரர் பொறுப்பை ஒப்படைத்தாக கூறும்பட்சத்தில் அவ்வாறு ஒப்படைப்பதாக ஊர் தர்மகர்த்தாவிடம் எழுத்துமூல அறிவிப்பை கொடுத்தேனா என்றால் இல்லை. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு மீண்டும் கரைக்காரர் பொறுப்பை நானே ஏற்றுக்கொள்கிறேன் என்றும் பிரதிவாதியிடம் கொடுத்த பொறுப்பை ரத்து செய்ய வேண்டும் என்றும் ஊர் தர்மகர்த்தாவிடம் எழுத்துமூல வேண்டுகோள் கொடுத்தேனா என்றால் இல்லை.

11. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு கரைக்காரர் பொறுப்பை என்னிடம் ஒப்படைக்க வேண்டும் என்று பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை. பொதுவாக கோவில் சொத்துக்கள் சேதப்படுத்தப்பட்டலோ, திருடு போனாலோ, கோவில் தர்மகர்த்தாதான் புகார் கொடுக்க வேண்டும் என்றால் கரைக்காரர்களோடு சேர்ந்துதான் தர்மகர்த்தா புகார் கொடுப்பார். மாரியம்மன் கோவிலில் கல்வெட்டு சேதப்படுத்தப்பட்டதாக கூறியுள்ள நிலையில் அதற்காக தர்மகர்த்தாமூலம் புகார் எதுவும் கொடுக்கப்பட்டதா என்றால் இல்லை. நான் தனிப்பட்டமுறையில் புகார் கொடுத்தேன் CSR பதிவு செய்யப்பட்டது. அந்த விவரம் மற்ற கரைக்காரர்களுக்கும் தெரியும். நான் சொல்வதுபோல் கல்வெட்டு மேற்படி கோவிலில் இல்லை என்றாலும் அவ்வாறு எந்த கல்வெட்டும் சேதப்படுத்தப்படவில்லை என்றாலும் இந்த வழக்கு தாக்கல் செய்வதற்காக ஆதாரத்தை ஏற்படுத்த வேண்டி ஒரு பொய்யான புகாரை கொடுத்து CSR பதிவு செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல, மேற்படி புகாரில் பிரதிவாதியே காவல் நிலையத்தில் நான் கரைக்காரர்ராக நீடிக்கவில்லை என்றும் ஊர் கூட்டத்தில் முடிவு செய்வதை ஏற்றுக்கொள்கிறேன் என்று எழுதிக்கொடுத்துள்ளார். நான் சொல்வது தவறு என்றாலும் பிரதிவாதி காவல் நிலையத்தில் எதுவும் எழுதிதரவில்லை என்றாலும் சரியல்ல.

Typed by Selvi. C. Sasikala - O.S. No.253/2017, Dt.27.10.2025.

12. வா.த.சா.ஆ.8-ஆன தீர்மான புத்தகம் வழக்கிற்காக என்னால் தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. வா.த.சா.ஆ.8-ல் கோவில் தொடர்பான வேறு எந்த தீர்மானமும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தை வழக்குடன் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், பின்னிட்டுதான் ஒப்படைத்தேன். தாவா வழக்குரையில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை தவிர மற்ற ஆவணங்கள் அனைத்தும் வழக்கு நிலுவையில் இருக்கும்பொழுது தயாரித்து தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

13. கடந்த 2002-ம் ஆண்டிலிருந்து தற்பொழுதுவரை பிரதிவாதிதான் ஊர் கரைக்காரர்ராக இருந்து வருகிறார் என்றால் சரிதான். ஆனால், நான் பலமுறை கேட்டும் என்னிடம் ஒப்படைக்கவில்லை என்பதால் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். சீலியம்பட்டி கிராமத்தின் வடகிழக்கில் மாரியம்மன்கோவில் உள்ளதாக தாவாவில் கூறியிருந்தால் தவறு என்றால் ஆமாம். சீலியம்பட்டி கிராமத்தின் தென்புறத்தின் பாலமுருகன் கோவிலும், விநாயகர் கோவிலும் அமைந்துள்ளதாக கூறியுள்ளது தவறு என்றால் ஆமாம். நான் சொல்வது போல் சீலியம்பட்டி கிராமத்தின் கரைக்காரர்ராக இருந்திருந்தால் தாவா கோவிலின் விவரத்தை சரியாக குறிப்பிட்டு இருப்பேன் என்றாலும் தாவா சொத்தின் முழு விவரம் தவறு என்றால் சரியல்ல.

14. தாவாவில் கண்டுள்ள விவரங்களின்படி கடந்த 25 ஆண்டுகளாக பிரதிவாதி கரைக்காரர்ராக இருந்து வருகிறார் என்றால் சரியல்ல, நான் கடந்த 2017ம் ஆண்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நான் கூறுவதுபோல் கரைக்காரர் பொறுப்பை வாய்மொழியாக பிரதிவாதியிடம் ஒப்படைக்க இயலாது என்றாலும் ஊர் தர்மகர்த்தாவும் மற்ற 8 கரைக்காரர்கள் சேர்ந்துதான் அந்த முடிவை எடுக்க முடியும் என்றாலும் சரியல்ல. கரைக்காரர் பொறுப்பை என்னிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும் பிரதிவாதியை அந்த பொறுப்பிலிருந்து நீக்க வேண்டும் என்றும் ஊர் தர்மகர்த்தாவிற்கும்,மற்ற

கரைக்காரர்களுக்கும் எழுத்துமூல அறிவிப்பு கொடுத்தேனா என்றால் இல்லை, வாய்மொழியாகதான் தெரிவித்தேன்.

15. காவல்துறையினர் எனக்கு பழக்கம் என்பதால் அவர்களின் உதவியோடு CSR பதிவு செய்து வழக்கில் ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சீலியம்பட்டி கிராமத்தின் பரம்பரை கரைக்காரர்ராக விளம்புகை பரிகாரம் கோர எனக்கு எந்த உரிமையும், முகாந்திரமும் இல்லை என்றால் சரியல்ல. அதேபோல் பிரதிவாதிக்கு எதிராக தடை உத்தரவு கோரும் பரிகாரமும் என்னால் கேட்க இயலாது என்றால் சரியல்ல. கடந்த 09.07.2017 பிரதிவாதி என்னை கரைக்காரர் பணியாற்ற விடமாட்டேன் என்று சவால் விட்டதாககூறியிருப்பது கற்பனையான சம்பவம் என்றால் சரியல்ல. உண்மையான வழக்குமூலம் மற்றும் உரிமையுடன் இந்த வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்குரை, சொத்து விவரம் மற்றும் வழக்கு ஆவணங்கள் அனைத்தும் தவறானவை என்பதால் வழக்கின் கோரியுள்ள எந்த பரிகாரமும் எனக்கு கிடைக்கத்தக்கததல்ல என்றால் சரியல்ல. எனவே, பிரதிவாதிக்கு ஏற்பட்ட செலவுத்தொகையுடன் இந்த வழக்கை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

முடிவு நேரம்: 04.54 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him /her to be correct

Sd/- D. Jansi Rani,
Principal District Munsif (FAC), Attur.

Typed by Selvi. C. Sasikala - O.S. No.253/2017, Dt.27.10.2025.